05.08.2024

O.S.No.185/2019

வா.சா.1.திருமதி.தவமணி க.பெ.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வில்லாபுரத்தில் வசித்து வருகிறேன். வில்லாபுரம், மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து சிறுதூர் கிராமத்தில் அமைந்துள்ளது. நான் எந்த பிளாட் நம்பருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. தாவா எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எங்கள் சொத்து என கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து காலியிடமாக உள்ளது. தாவா சொத்தை சுற்றிலும் முள்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு முள்கம்பி வேலி அமைக்கப்பட்டதில் நான்கு நுழைவாயில் உள்ளது என்றால் சரிதான். யார் அவ்வாறு முள்கம்பி வேலி அமைத்து கேட் போட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த கம்பிவேலிக்குள் பிரதிவாதி தரப்பு பள்ளி இயங்கி வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதி பள்ளிக்கு பாத்தியப்பட்டது என்று நான், எனது வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

2. நான் தாவாசொத்தினை பார்த்ததில்லை, எனது கணவர்தான் தாவா சொத்தினை எனது பெயரில் கிரையம் வாங்கினார், அவர்தான் தாவா சொத்தினை அடிக்கடி சென்று பார்த்து வருவார். தாவா சொத்து விளையாட்டு மைதானமாக உள்ளது என்றாலும், அது பிரதிவாதி பள்ளிக்கு பாத்தியப்பட்டது என்றாலும, அது தெரிந்துகொண்டே மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தினை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால், கொரானாவிற்கு முன்பு ஒருமுறை சென்று பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள சொத்துதான் தாவாசொத்து அடங்கிய சொத்து என்றால் சரிதான். (**மேற்படி புகைப்படங்கள் இரண்டு எண்ணிக்கை பி.வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி புகைப்படத்தில் பிரதிவாதி நடத்தி வரும் பள்ளிக்கூடம் காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் காணப்படும் சொத்தும் என்னைப்போன்றே தாவா சர்வே எண்ணில் மற்ற சொத்துக்களை காட்டி வழக்கு

தாக்கல் செய்துள்ள சொத்துக்களும் ஒன்றோடொன்று இணைந்து ஒரே சமுக்கமாக உள்ளது என்றால் சரிதான்.

3. இளம்ஜி கோபாலகிருஷ்ண பள்ளிக்கூடம் சுமார் 50 ஆண்டு பழமையான பள்ளிக்கூடம் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குள் பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் நாங்கள் தற்போது உள்ளே செல்லமுடியாது என்றால் சரிதான். எங்களை சொத்திற்குள் செல்ல பிரதிவாதிகள் அனுமதிப்பதில்லை. தாவா சொத்தினை சுற்றிலும் முளவேலி அமைத்து சுமார் 15 ஆண்டுகள் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக தாவாசொத்துடன் இணைந்த மற்ற சொத்துக்களும் இணைந்து முள்வேலி அமைத்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகிறது என்றாலும், அந்த சங்கதியை நான் தெரிந்துகொண்டு, இந்த வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நில புலன்கள் கொண்டவர்கள் என்றாலும் வசதி படைத்தவர்கள் என்றாலும் எனக்கு தெரியாது. அய்யனார் யார் என்றால் அவரை நான் பார்த்தில்லை, ஆனால் அவரிடம் இருந்து தான் நாங்கள் கிரையம் வாங்கினோம், எனது கணவர் அவரை பார்த்துள்ளார். தாவா சொத்தினை நாங்கள் அளந்து பார்த்துதான் கிரையம் வாங்கினோம். அவ்வாறு அளந்து பார்த்து கிரையம் வாங்கியதாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1, 169/2ல் கட்டுப்பட்ட சொத்துக்களை இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யயார் என்பவருக்கு கிரையமோ, பவர் பத்திரமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் மற்றும் பொது அதிகார ஆவணத்தினை நான் வாங்கி பார்த்தில்லை என்றாலும், அந்த கிரைய ஆவணம் என் வசமும் இல்லை என்றாலும் சரிதான், ஆனால் எனது கணவர்தான் அந்த ஆவணங்களை சரிபார்த்து எனது பெயருக்கு கிரையம் பெற்றுக்கொடுத்தார். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் சர்வே எண்கள்.169/2ஐ பொறுத்து மதுரை சார்பதிவாளர் அலுவலகம் இருக்கும் போது கேரளாவில் உள்ள பாறசாலையில் இளம்ஜி சௌந்திராஜன் கிரையம் கொடுத்ததாக சொல்லி மோசடியாக கிரையம் பதிந்துள்ளார்கள் என்றாலும், அவர் ஒருபோதும் யாருககும் கிரையமோ, பொது

அதிகார ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாகசொல்லப்படும்கிரைய ஆவணம் மற்றும் அவர் பெற்றதாக சொல்லப்டும் பொது அதிகார ஆவணம் ஆகியவற்றில் கண்டுள்ள கையொப்பம் இஎம்ஜி சௌந்திராஜன் கையொப்பம் அல்ல என்றாலும், மோசடியாக அவரது கையொப்பத்தினை இட்டு அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

5. அய்யனாருககு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாதபோது அவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக கூறுவதால் எனது கிரையம் மோசடியானது என்றாலும், தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும்சித்திக்கவில்லை என்றாலும் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் மற்றும் அவர் பெற்றதாகெ சால்லப்படும் பொது அதிகார ஆவணம் ஆகியவற்றின் உண்மை தன்மையை நிருபிக்காத வகையில் தாவா சொத்தினை பொறுத்து எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்ப்படும கிரைய ஆவணம் மற்றும் அவர் பெற்றதாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரம் ஆகியவற்றின் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் முள்கம்பி எதுவும் அமைக்கவில்லை என்றால்சரிதான் கற்கள் ஊன்றி இருந்தோம். நான் கூறுவதுபோல் கற்கள் எதுவும் ஊன்றவில்லை என்றாலும், இந்த வழககிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல, அந்த கற்களை பிரதிவாதிகள் பிடுங்கி விட்டார்கள். அவ்வாறு கற்களை பிரதிவாதிகள் பிடுங்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும சரியல்ல.

6. தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்ட பின்பு அதன் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா எதுவும் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் நாங்கள் முயற்சிசெய்தோம், ஆனால் மாற்றப்படவில்லை. தாவா சொத்து தற்போது வரை பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-22 புலவரைபடம் எனது கிரைய ஆவணத்துடன் இணைந்து காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ-22 ஆவணம் இந்த வழககிற்கா உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அந்த

ஆவணத்தினை எனது வழக்கிற்க்கு அனுகூலமாக எடுத்துககொள்ள முடியாது என்றால் சரியல்ல. கேரளா மாநிலம் பாறசாலை என்ற இடத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் எனப்வருக்கு ஒரு செண்டு நிலம் இருந்ததாக எனது வழகக்ையில் சொல்லி உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த நிலத்தினை நான் நேரடியாக பார்த்தில்லை என்றால் சரிதான். மேற்படி ஒரு செண்டு இடத்திற்கு இஎம்ஜி சௌந்திராஜன் பெயரில் ஆவணம் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அய்யனார் கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளை அப்படியே எனது வழககுரையில் நான் சொல்லி உள்ளேன் என்றாலும், எனக்கு நேரிடையா எந்த விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. இஎம்ஜி சௌந்திராஜனுக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் ஒரு செண்டுநிலம் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், தாவா சொத்தினை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு ஒருசெண்டுநிலம் அவருககு இருநததாக நான் பொய்யாக வழககுரையில் சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எணண்.169/2 ஆகியவை கோபாலகிருஷ்ண கோன்டிரஸ்டுககு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்து கோபாலகிருஷ்ணனோக் டிடரஸ்டுககு பாத்தியப்பட்ட சொத்து என்பதைதெரிந்து கொண்டுஇந்த வழக்கிற்காக நான் பொய்யாக மறுத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பொறுத்து நீதிமன்ற அனுமதி இல்லாமல் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கள் மேடு பள்ளமாக இல்லாமல் சமதளமாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தினை கிரையமம பெறுவதற்கு முன்பு 17.03.1988ல் பள்ளிகல்வி துறையிடம் அனுமதி பெற்றுள்ளதாக நான் சொல்லி உள்ளதால் அந்த விவரம் எனக்கு தெரியாது என்றாலும், அந்த ஆவணத்தினை பார்த்தில்லை என்றாலும் சரிதான். மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையின் உத்தரவின் பேரில் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களில் அடங்கிய சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எப்போது அளந்தார்கள்

என்றால் கொரானா காலத்திற்கு பின்னிட்டு அளந்தார்கள். மேற்படி அளவீட்டிற்கு பின்பு சர்வே எண்169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் பள்ளி விளையாட்டு மைதானமும், பள்ளி விடுதியும் அமைந்திருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துளார்கள் என்றால் சரியல்ல.

8. எனக்கு முன்பு இந்த வழககோடு தொடர்புயை மற்ற வழக்குகளில் சாட்சியம் அளித்த நபர்கள் அனைவரும் நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் பள்ளி விளையாட்டு மைதானமும், பள்ளி விடுதியும் அமைந்திருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும் அதனை தெரிந்துகொண்டோ இந்த வழககிற்காக மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அய்யனார் மோசடியாக எங்களுக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றாலும, அவருககு எதிராகதான் நாங்கள் பரிகாரம் கோரு வேண்டும் என்றாலும் இந்த பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டு பெயரில் ரூபாய்.50,000/- வைப்பிடு செய்யப்பட்டுள்ளதாக எனது வழக்குரையில் சொல்லி உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

9. எனது பிராதில் கோபாலகிருண்ஷ கோன் டிரஸ்டு தொடர்பாக பிரதிவாதிகளை உள்ளடக்கி அசல் வழககு எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் சொல்லி உள்ளதால் அ ந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும்ள ன்றால் சரியல்ல. அய்யனார் எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அய்யனாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால உரிய

தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த வழகசு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழகசு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

10. தாவாசொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு சுமார் செண்டு 1-க்கு சுமார் 5 லட்சம் வரை உள்ளது என்ற விவரத்தினை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் முறையாக மதிப்பிடு செய்து நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக இந்த வழகசு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகீறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.